யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

சாவகச்சேரி.

# நிறுவுநர் நினைவுப் பேருரை

## 05.02.2012




பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், Ph.D

தலைவர்– வரலாற்றுத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# தென்மராட்சியின் தொன்மையும் பெருமையும் – தொல்லியல் வரலாற்று நோக்கு.


## பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், Ph.D

தலைவர்– வரலாற்றுத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


05.02.2012.

# தென்மராட்சியின் தொன்மையும் பெருமையும் – தொல்லியல் வரலாற்று நோக்கு

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், **Ph.D**
தலைவர்- வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**நினைவுரைக்கு முன் சில வார்த்தைகள்**

1978 - 1979 காலப் பகுதியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் மாணவனாக நான் இருந்த காலத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர மாணவ மன்றத்தில் இருந்து தமது மாணவர் ஒன்றியம் நடாத்தும் நிகழ்வொன்றில் எமது பாடசாலையில் இருந்து இரு மாணவப் பிரதிநிதிகளை அனுப்புமாறு அழைப்பு வந்தது. அந்நிகழ்வில் கலந்து கொள்ள எனது பெயரைச் சிபார்சு செய்யுமாறு நான் மாணவ மன்றத் தலைவரிடம் வேண்டிய போது 174 விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் அங்கம் வகிக்கும் மாணவ மன்றத்தில் 7 அங்கத்தவர்களைக் கொண்ட கலைப்பிரிவு மாணவர்களை அனுப்பமுடியாது என பதில் வந்தது. அப்போது அந்தப் பதில் எனக்கு கவலையையும், அவமானத்தையும் தந்தது. ஆனால் இன்று அதே பாடசாலையில் புனிதமான நிகழ்வொன்றில் கலந்து கொண்டு நினைவுப் பேருரை நிகழ்த்த அழைப்பு வந்திருப்பது கடந்த காலத்தை நினைத்துப் பெருமையடைச் செய்துள்ளது. ஆகவே அந்த வாய்ப்பை தந்த கல்லூரி அதிபருக்கும், ஆசிரியர் குழாத்திற்கும், பழைய மாணவர் சங்கத்திற்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கும் இவ்விடத்தில் முதலில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

1904 ஆம் ஆண்டு அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களால் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கில் சாவகச்சேரி சந்தைக்கு அண்மையில் சிறிய கொட்டிலில் அமைக்கப்பட்ட சைவத்தமிழ் கலவன் பாடசாலையின் வரலாறு இன்று 108 ஆண்டுகளை அடைந்துள்ள நிலையில் அக்கல்லூரியை நிறுவிய அமரர் தாமோதரம்பிள்ளையை நினைவு கூரும் முகமாகக் இங்கு கூடியுள்ளோம். சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையின் தோற்றம் என்பது ஆறுமுக நாவலர் பெருமானின் சிந்தனையில் தோன்றிய ஒரு கருப்பொருளாகும். அன்னார் வாழ்ந்த காலத்தில் பிரித்தானியரது ஆங்கிலக் கல்வியும், கிறிஸ்தவ மதமும் எமது சுதேச பண்பாட்டுக்கு சவாலாக அமைந்தது. இந்நிலையில் இலங்கையின் தென்பகுதியில் அநாகரிக தர்மபாலரும், இலங்கையின வட பகுதியில் ஆறுமுகநாவலரும் தோன்றி மக்களுக்குப் புதுவழிகாட்டப் புறப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் சைவத்தையும், தமிழையும் மீள் உருவாக்கம் செய்ய ஒரே வழி கிறிஸ்தவப் பாடசாலைக்கு இணையாக சைவத் தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்குவதே சிறந்த வழியென்பதை முதலில் உணர்த்திய பெருமை ஆறுமுக நாவலர் பெருமானுக்கே உரியது. இதன் விளைவால் ஆறுமுகநாவலர் வழிவந்த பெரியார்கள் சிலர் தமது செல்வத்தின் ஒரு பகுதியை சைவத் தமிழ்ப் பாடசாலைகளை அமைப்பதற்கே அர்ப்பணித்தனர். அந்த வழியில் தென்மராட்சியில் தோன்றிய பெரியவராக அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களைப் பார்க்கிறேன். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தோன்றிய பாடசாலைகளின் வரலாற்றைப் பார்த்தால் அவற்றில் 70 வீதமான பாடசாலைகள் சைவத்தையும், தமிழையும்

நேசித்த தனிப்பட்ட சமூக நலன் விரும்பிகளால் தோற்றுவிக்கப்பட்டவையாகும். அதன் எண்ணிக்கை 550ஐ தாண்டும் என்பது எனது கணிப்பாகும். ஆனால் பல பாடசாலைகள் அதன் வரலாற்றையும், அவற்றைத் தோற்றுவித்த பெரியார்களையும் மறந்து விட்டு கல்லூரியின் பெருமையை மட்டும் பேசும் அறிவைக் கொண்டுள்ளன. இதற்குமாறாக 108 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் இக்கல்லூரியை நேசிக்கும் சமூக நலன் விரும்பிகள் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களை வருடந்தோறும் நினைவு கூர்ந்துவருவது தென்மராட்சி மக்களின் நன்றி மறவாப் பண்பிற்குச் சிறந்த அடையாளமாகும்.

எமது சமூகம் ஒரு கல்லூரியின் பெருமையை உயர்ந்த கல்விப் பெறுபேறுகள், விளையாட்டுத் துறையில் அடையப்பெறும் சாதனைகள், கல்லூரிகள் வளர்த்தெடுக்கும் நல்லொழுக்கம் என்பவற்றின் அடிப்படையில் மதிப்பிடுகின்றன. சில கல்லூரிகள் எந்தச் சாதனையும் இன்றி கல்லூரியை நிறுவிய பெரியாரைப் புகழ்ந்து கொள்வதில் மட்டும் பெருமை கொள்கின்றன. 1904 இல் சாவகச்சேரி சந்தைக்கு அண்மையில் சிறு கொட்டிலில் அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி 1905 இல் சங்கத்தானையில் தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டு 1908 இல் சங்கத்தானை கந்தசாமி கோவிலுக்கு மாற்றப்பட்ட தமிழ்ப் பாடசாலை அமரர் தாமோதரம்பிளையின் மேற்பார்வையில் 1926 இல் இக்கல்லூரியுடன் இணைக்கப்பட்டு,1996 இல் தென்மராட்சியின் ஒரேயொரு தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு இன்று பல விழுதுகள் கொண்ட ஆலமரமாகக் காட்சியளிக்கிறது. இந்த வளர்ச்சிக்குப் பின்னால் இக் கல்லூரியில் கடமையாற்றிய, ஆற்றி வருகின்ற ஆசிரியர்கள் பலரின் அர்ப்பணிப்பும், தியாகம், கடமை உணர்வும், கல்லூரியை நேசித்துவரும் மக்களின் ஒத்துழைப்பும், பழைய மாணவர் அமைப்புக்கள் வழங்கியுள்ள நன்கொடைகளும், பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் கட்டிக் கொடுத்த கட்டிடங்களும் இணைந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது. நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த போது யாழ் நகரப் பாடசாலைகளில் இருந்தும், வடமராட்சிப் பாடசாலைகளில் இருந்தும் எத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகம் வந்தார்கள் என்றே கணப்கெடுப்பதுண்டு. ஏனெனில் அவர்களின் எண்ணிக்கையே அப்போது அதிகமாக இருந்தது. ஆனால் 1985க்குப் பின்னர் அப்பாடசாலைகளுக்கு இணையாக தென்மராட்சியில் இருந்து பல மாணவர்கள் அனுமதிபெற்று வருவதைக் காணலாம். இந்த மாற்றத்திற்கு இக்கல்லூரியின் வளர்ச்சியும் ஒரு முக்கிய காரணம் என்பதில் இருவேறு கருத்திருப்பதாகத் தெரியவில்லை. இது அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள் 100 ஆண்டுகளுக்கு முன்னர் தென்மராட்சியின் எதிர்காலக் கல்வி பற்றிக் கண்ட கனவுக்கு இக்கல்லூரி செயல் வடிவம் கொடுப்பதாகவே நான் பார்க்கிறேன். முன்னாள் தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்கள் தனது நூலில் தென்மராட்சி பற்றி கூறும் போது பட்டினத்திற்குரிய அனைத்து வசதிகளும் கொண்ட கிராமம் எனக் குறிப்பிடுகிறார். ஆனால் கால மாற்றத்திற்கு ஏற்ப தென்மராட்சி மக்கள் தம்மை மாற்றிக் கொண்டு தீவிரமாக வளர்ந்தாலும் ஒட்டு மொத்த யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய மரபுகளை தொய்வின்றி தொடர்ந்து பேணிவருவதில் அதன் பெருமை மேலோங்கி இருப்பதை நான் பார்க்கிறேன். அதன் தொடக்கப் புள்ளியாக இருந்த

இக்கல்லூரி தொடர்ந்தும் அதை வளர்ப்பதால் எதிர்காலத்தில் மேலும் பெருமை பெறும் என நம்புகிறேன்.

**தொன்மையும் பெருமையும்**

ஏறத்தாழ 90 சதுர மைல் பரப்புக்குள் கைதடி, நாவற்குழி, மறவன்புலவு, தனங்கிளப்பு, சாவகச்சேரி, மட்டுவில், மீசாலை, சரசாலை, மந்துவில், எழுதுமட்டுவாழ், மிருசுவில், உசன், கச்சாய், முதலான ஊர்களை உள்ளடக்கிய வட்டாரமே தென்மராட்சிப் பிராந்தியம் என அழைக்கப்படுகிறது. தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பிராந்தியங்களுக்கு தொன்மையான வரலாறு உண்டு என்பதை எடுத்துக்காட்ட இவை முன்னொரு காலத்தில் மறவர் ஆட்சிக்கு உட்பட்டவை என்பதற்கு மக்களிடையே நிலவும் ஐதீகங்கள், வாய்மொழிச் செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றையே நானும் முதன்மை ஆதாரங்களாக குறிப்பிட்டு கூறுவது எனக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை. மாறாக இப்பிராந்தியத்திற்கு 2000 ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதற்கு 1980 களின் பின்னர் இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த ஆதாரங்களை எடுத்துக் காட்டுவது பொருத்தமாகத் தெரிகிறது. அதற்கு முன்னோடியாக தென்மராட்சின் தொன்மை தொடர்பாக நம்பத்தகுந்த வரலாற்று மூலங்களில் வரும் குறிப்புக்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது அவசியம் எனக் கருதுகிறேன்.

யாழ்ப்பாண அரசு தொடர்பாக எழுந்த தமிழ் இலக்கியங்களில் கி.பி.13 ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த போது யாழ்ப்பாணத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் ஒன்றாக தென்மராட்சி குறிப்பிடப்படுகிறது. ஆயினும் யாழ்ப்பாணம் (யாழ்பாணாயன்பட்டினம்) என்ற பெயர் முதன் முறையாக கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குரிய திருப்புகழிலும், விஜயநகரப் பேரரசு காலக் கல்வெட்டிலும் குறிப்பிடப்படுவததற்கு முன்னர் தென்மராட்சிக்கு உட்பட்ட சில இடங்கள் வரலாற்றுச் சிறப்புடைய வட்டாரங்களாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் இராஜாதிராஜ சோழன் தமிழகத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த போது அவனது படைகள் வடஇலங்கை மீது படையெடுத்து மட்டுவில் (மட்டிவால்) என்னும் ஊரில் தங்கியிருந்த படைவீரர்களையும், யானைகளையும் சிறைப்பிடித்து தமிழகத்திற்கு கொண்டு சென்றதாக திருவாலங்காடு மற்றும் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்விடத்தைப் பேராசிரியர் பரணவிதானாவும், பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியும் தென்மராட்சியில் உள்ள தற்போதைய மட்டுவில் கிராமம் என அடையாளப்படுத்தியுள்ளனர். 14 ம் நூற்றாண்டில் எழுந்த ***நம்பொத்த*** என்ற சிங்கள இலக்கியம் வடஇலங்கையை ***தமிழ்பட்டினம்*** என அழைப்பதோடு அப்பட்டினத்தின் எல்லையில் எல்லைக் கற்கள் நாட்டப்பட்டிருந்ததாகவும் கூறுகின்றது. அது கூறுகின்ற இடங்களில் தென்மராட்சியும் உள்ளடங்கியிருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. 15 ஆம் நூற்றாண்டில் எழுந்த ***கோகிலசந்தேசய*** என்ற சிங்கள இலக்கியம் தென்மராட்சியை யாழ்ப்பாண

அரசுடன் தொடர்புபடுத்திக் கூறும் போது இங்குள்ள சாவகச்சேரிப் பிராந்தியத்தை சாவக்கோட்டை எனவும், இதே பிராந்தியத்தை 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டில் எழுந்த ***திரிஸிங்கள கடயிம் ஸஹ வித்தி*** என்ற நூல் சாவகிரி எனவும் குறிப்பிடுகின்றன. பேராசிரியர் பத்மநாதன் யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னரே வடஇலங்கையில் தமிழர் சார்பான அரசு ஒன்று சாவகன் தலைமையில் இருந்ததால் அவனது ஆதிக்கம் ஏற்பட்டதன் அடையாளமே தென்மராட்சியில் சாவகச்சேரி, சாவகன்கோட்டை முதலான இடப்பெயர்கள் தோன்றக் காரணம் எனக் குறிப்பிடுகிறார்.

தென்மராட்சியின் வரலாறு யாழ்ப்பாண அரசு காலத்தில் மேலும் முன்னிலை பெற்றதெனக் கூறலாம். வலிகாமம், வடமராட்சி ஆகிய பிராந்தியங்களைவிட யாழ்ப்பாண அரசு கால நிர்வாகத்தில் தென்மராட்சியின் நிலப்பரப்பு மிகப் பெரியதாக இருந்ததுடன் யாழ்ப்பாண அரசு காலப் பொருளாதாரத்திலும், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்திலும் இப்பிராந்தியமே முதன்மை இடத்தைப் பெற்றிருந்ததாக வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன. பெருநிலப்பரப்பு, கடல்சார் வாணிபம் என்பவற்றில் கச்சாய்த் துறைமுகம் முக்கிய இடத்தைப் பெற்றதுடன் யாழ்ப்பாண அரசுக்கு உதவியாக தென்னிந்தியாவில் இருந்துவந்த படைகள் இத்துறை முகத்தையே பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. வையா பாடல், கைலாயமாலை முதலான தமிழ் நூல்கள் யாழ்ப் பாண அரசு காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து வரு



யாழ்ப்பாண [illegible] நாணயம்

விக்கப்பட்ட தமிழ்க் குடிகளில் ஒரு பிரிவினர் தென்மராட்சிப் பிராந்தியத்திலுள்ள கச்சாய், முகமாலை, கோகிலாக்கண்டி முதலிய இடங்களில் குடியேற்றப்பட்டதாகவும் அவ்விடங்களை நிர்வகிக்கும் அதிகாரிகளை நியமித்ததாகவும் கூறுகின்றன. கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பின்னர் இலங்கையில் இஸ்லாமிய மக்கள் வாழ்ந்த வரலாறு தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் குடியேறிய இஸ்லாமிய மக்கள் படிப்படியாக தெற்கு நோக்கி நகர்ந்து கேரளாவில் உள்ள காயல் பட்டினத்தை தமது வணிக நகரமாக மாற்றியதுடன் தமிழர்களுடன் திருமண உறவுகளை ஏற்படுத்தியதால் அவர்கள் தமிழ் பேசும் மக்களாக மாறினர். காலப்போக்கில் அவர்கள் இலங்கையுடனும் வணிக, கலாசார உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். இந்நிலையில் யாழ்ப்பாணத்துடன் தொடர்பை ஏற்படுத்திய அவர்கள் முதலில் தென்மராட்சியில் உள்ள உசன், முகமாலை, கச்சாய் சாவகச்சேரி ஆகிய இடங்களிலேயே குடியேற்றங்களை ஏற்படுத்தியதாக யாழ்ப்பாணவைபமாலை குறிப்பிடுகின்றது.

கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த போர்த்துக்கேய ஆசிரியரான கெய்ரோஸ்பாதிரியார் போர்த்துக்கேயருக்கு எதிராக யாழ்ப்பாண மன்னர்கள் போரிட்ட காலங்களில் அப்படை வீரர்களின் காவல் மையமாகவும், யுத்த தளபாடங்களைப் பாதுகாக்கும் இடங்களாகவும் தென்மராட்சியில் உள்ள மட்டுவில், மந்துவில் முதலான கிராமங்கள் காணப்பட்டன எனக் கூறுகிறார். புரித்துறையில் இறங்கி யாழ்ப்பாணம் நோக்கி போர்த்துக்கேயப் படைகள் முன்னேறிய போது அச்சுவேலிக்கும் புத்தூருக்கும் இடையில் யாழ்ப்பாண மன்னர்களுடன் நடைபெற்ற போரைத்

தொடர்ந்து போத்துக்கேயப் படைகளின் ஒரு பிரிவினர் கிழக்கு நோக்கி தென்மராட்சிக்குச் சென்றதாக போர்த்துக்கேய ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் போர்த்துக்கேயப் படைகளிடம் தோல்வியடைந்த சங்கிலி மன்னன் கோப்பாயிற்கு தப்பிச் சென்று பின்னர் அங்கிருந்து தொண்டமானாறு கடல் நீரேரியூடாக மந்துவில் சென்றடைந்ததாகக் கூறுகிறது. இன்றும் மந்துவிலில் இடியுண்டு காணப்படும் புராதன கட்டிடம் சங்கிலியன் கோட்டையென்றே அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம். முதன் முறையாக 1658 இல் அதாவது போத்துக்கேயர் ஆட்சியின் முடிவில் யாழ்ப்பாணத்து மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றது. அதில் 128 கிராமங்களில் 120000 மக்கள் வாழ்ந்து வந்ததாகக் கூறும் போர்த்துக்கேய ஆவணங்களில் 52 கிராமங்கள் தென்மராட்சியையும் அதைச் சூழவுள்ள பிராந்தியத்திலும் காணப்பட்டதாகக் கூறுகிறது. இக்கணக்கு யாழ்ப்பாணத்தின் அன்றைய மொத்த மக்கள் தொகையில் 40வீத மக்கள் தென்மராட்சிப் பிராந்தியத்தில் வாழ்ந்ததைக் காட்டுகிறது. இவ்வாறு ஐரோப்பியர் ஆட்சி வரை தென்மராட்சியின் வரலாறு இலக்கியங்களில் கூறப்பட்டாலும் அதன் தொன்மை வரலாற்றை வெளிச்சம் போட்டுக்காட்டுவதில் சமீபகாலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு என்பதை முன்னிலைப்படுத்திக் காட்டுவதே எனது நினைவுப் பேருரையின் பேரவாவாகும்.


**தென்மராட்சியின் பூர்வீக மக்கள்.**

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தென்மராட்சிப் பிராந்தியத்தில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் எனக் கூறுவதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பூர்வீக மக்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? என்பது பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் 1970களின் பின்னரே ஓரளவுக்கு மேற்கொள்ளப்பட்டதெனக் கூறலாம். இத்தகைய ஆய்விற்கு 1970களில் பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலாபேக்கிலே தலைமையில் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களம் அமைத்து கொடுத்தது. இந்த ஆய்வின் மூலம் குடாநாட்டின் தொடக்ககாலப் பூர்வீக மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடர் என்பதும், அவர்கள் தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து குறிப்பாகத் தமிழகத்திலிருந்து இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் குடியேறினர் என்பதும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. 1980களில் இருந்த குடாநாட்டின் பூர்வக குடியேற்றங்கள் பற்றி ஆய்வு மேற்கொண்ட பேராசிரியர் பொன்னம்பலம் இரகுபதி தனது ஆய்வின் மூலம் குடாநாட்டின் 40 இற்கும் மேற்பட்ட புராதன குடியிருப்பு மையங்களை வெளிக்கொணர்ந்தார். அக்குடியிருப்பு மையங்கள் சில தென்மராட்சியில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில் தற்போதைய வாரிவனநாதர் ஆலயத்திற்கு மேற்காக உள்ள மண்மேட்டில் அவர் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின் மூலம் கந்தரோடையைப் போன்ற புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.


1990களின் பின்னர் இக்கட்டுரை ஆசிரியர் தென்மராட்சியில் கண்ணாடிப்பிட்டி, மந்துவில், வரணியிலுள்ள சோழன்மாசேரி, வேலம்பிராய் முதலான இடங்களில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் அவ்விடங்களில் எல்லாம் புராதன காலத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதியில் இலங்கைக்குப் புலம்பெயர்ந்த மக்கள் இலகுவாக நீரைப் பெறக்கூடிய கடற்கரை சார்ந்த மணற்பாங்கான பிரதேசங்கள், அதிக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தாது இலகுவாகக் குடியிருப்புக்களை அமைக்கக் கூடிய சிறிய பற்றைக்காடுகள் உள்ள இடங்கள், கடலுணவைப் பெறக்கூடிய பரவைக்கடல், கடல் போக்குவரத்திற்குச் சாதகமான துறைமுகங்கள் என்பவற்றை தமது குடியிருப்பை அமைக்கக்கூடிய இடங்களாகத் தெரிவு செய்தனர். தென்மராட்சியில் இச்சாதகமான சூழல்கள் பல இடங்களில் காணப்படுவதால் அவ்விடங்களில் எல்லாம் ஆதியில் மக்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தியிருப்பார்கள் எனக் கருத இடமுண்டு. இலங்கையின் சமீபகாலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் கி.மு.3ஆம் நூற்றாண்டில் பௌத்தமதம் பரவ முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்களும், பண்பாடும் தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து ஏற்பட்டன என்பதை உறுதிசெய்கின்றன. தென்மராட்சியின் அமைவிடம் இலங்கை தமிழக உறவின் குறுக்கு நிலமாகவும், தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கும் தொடக்க நிலமாகவும் இருப்பதனால் ஆதிகாலம் தொட்டு தமிழகப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்ட பிராந்தியமாக இது இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

**புராதன காலத்தில் தென்மராட்சியின் அயல் நாட்டுத் தொடர்புகள்**

1990களில் டிறிபேக் கல்லூரியின் அதிபராக இருந்த அமரர் பாலச்சந்திரன் அவர்கள் தென்மராட்சியில் தான் சேகரித்த பண்டைய நாணயங்கள் சிலவற்றை எனது ஆய்வுக்கு கொடுத்திருந்தார். அதுவே எனது தென்மராட்சியைப் பற்றிய தொல்லியல் ஆய்வுக்கு உந்து சக்தியாக இருந்தது. தென்மராட்சியைப் பற்றிய எனது தொல்லியல் ஆய்வில் பல்வேறு காலகட்டத்தை சேர்ந்த வடஇந்திய, தென்னிந்திய, தமிழக, உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவற்றுள் உரோமர் கால நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி இவ்விடத்தில் எடுத்துரைப்பது தென்மராட்சியின் தொன்மையையும், பெருமையையும் தெரிந்து கொள்ள உதவும் எனக் கருதுகிறேன். கி.பி.1ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க நாட்டவரான தொலமி தனது நூலில் தென்மராட்சிக்கு உட்பட்ட வடஇலங்கையை நாகடிப (நாகதீவு) எனக் கூறுகிறார். இதேகாலப் பகுதியைச் சேர்ந்த பெரிப்புலஸ் என்ற நூல் வடஇலங்கைக்கும் மேற்காசிய நாடுகளுக்குமான வணிக உறவு பற்றிக் கூறும் போது ஆரம்பகாலங்களில் உரோம வணிகர் இலங்கைக்கு வராமலே தமக்குத் தேவையான இலங்கைப் பொருட்களை தென்னிந்தியத் துறைமுகங்களில் பெற்றதாகவும், கி.பி.1ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் அவர்கள் நேரடியாக இலங்கைக்குச் சென்று வணிகத்தில் ஈடுபட்டதாகவும் கூறுகிறது. அது உண்மை என்பதை தென்மராட்சியில் கிடைத்த உரோம நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்நாணயங்கள் தென்மராட்சியில் கண்ணாடிப்பிட்டி,


கி.மு.3 நூற்றாண்டு இந்திய நாணயம்

வரணி, கச்சாய் முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டாலும் இயற்றாலையில் கிடைத்த பல நூற்றுக் கணக்கான நாணயங்கள் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.



உரோம நாணயம்

தென்மராட்சியில் மந்துவில் என்ற ஊரில் இயற்றாலை என்ற குறிச்சி காணப்படுகிறது. அக்குறிச்சியில் முன்பொரு காலத்தில் 20 ஏக்கருக்கு மேற்பட்ட பிரதேசத்தில் அழிவடைந்த மிகப்பெரிய கட்டிடங்களின் சிதைவு காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. இற்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விடத்தின் வரலாற்றுச் சிறப்பை நேரில் பார்வையிடச் சென்ற சுவாமி ஞானப்பிரகாசர் தான் அவ்விடத்திற்குச் சென்ற போது அங்கிருந்த கட்டிடங்களை மக்கள் இடித்து அக்கற்களை வண்டில் வண்டிலாக பிற ஊர்களுக்கு எடுத்துச் சென்றதாக தனது யாழ்ப்பாண விமர்சனம் என்ற நூலில் குறிப்பிடுகிறார். இப்பிரதேச மக்களிடையே இக்கட்டிட அழிபாடுகளை சங்கிலியன் கோட்டையென அழைக்கும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகிறது. இதனால் இக்கோட்டையை யாழ்ப்பாணத்தில் பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த சங்கிலி மன்னனே கி.பி. 14-15 ஆம் நூற்றாண்டளவில் கட்டியிருக்க வேண்டும் என நம்புகின்றனர். இதற்கு இக்கட்டிட அழிபாடுகளுக்கு அருகில் உள்ள பழமையான ஆலயம் கோட்டைவாசல் பிள்ளையார் என அழைக்கப்படுவதை மேலும் ஒரு ஆதாரமாக சுட்டிக்காட்டுகின்றனர்.


ஆனால் சங்கிலியன் வரலாறு தென்மராட்சியோடு தொடர்புபடுத்தி வரலாற்று மூலங்களில் கூறப்பட்டாலும், இது போன்ற கோட்டை அவன் பெயரில் தென்மராட்சியில் இருந்தது பற்றிக் கூறவில்லை. ஏன் யாழ்ப்பாண அரசின் தலைநகராக இருந்த நல்லூரில் கூட கோட்டை இருந்ததற்கான தொல்லியல் ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இருப்பினும் யாழ்ப்பாணக் கோட்டையை அடுத்து குடாநாட்டிலுள்ள புராதன பெரிய கட்டிடம் தென்மராட்சியில் இருந்த தென்பதில் ஐயமில்லை.

அண்மையில் இக்கட்டிட அழிபாடுகள் காணப்பட்ட இடம் பயிர்ச் செய்கைக்காக திருத்தப்பட்ட போது இயற்றாலையை சேர்ந்த திரு.சிற்றம்பலம் என்பவர் 700 உரோம நாணயங்கள் கொண்ட மண்பானையொன்றைக் கண்டுபிடித்தார். இந்நாணயங்கள் மண்பானை ஒன்றில் காணப்பட்டதால் இவை பிற்காலத்தில் பிற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கலாம் என வாதிட இடமுண்டு. ஆனால் இந்நாணய மட்பானை கண்டெடுக்கப்பட்ட இடத்திலும் அதன் சுற்றாடலிலும் நாம் தொடர்ந்து ஆய்வை மேற்கொண்ட போது அவ்விடங்களில் புராதன குடியிருப்புக்கள் இருந்தமைக்கான பலவகைத் தொல் லியற் சின்னங்களுடன் உரோமர் கால நாணயங்களும் பிற்காலப் பாண்டிய, சோழ



ஒல்லாந்தர் கால நாணயம்

நாணயங்களுடன் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால நாணயங்கள் பலவற்றையும் கண்டுபிடிக்க முடிந்தது. இவற்றை நோக்கும் போது ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு மேல் மக்கள் வாழ்ந்து வந்திருக்கலாம் என்பது தெரிகிறது. அதேவேளை இவ்விடத்தில் பல்வேறு காலகட்ட, பல நாடுகளுக்குரிய சான்றுகள் கிடைத்திருப்பதை நோக்கும் போது புராதன கட்டிட அழிபாடுகள் காணப்பட்ட இடம் முன்பொரு காலத்தில் கடல்சார் வர்த்தகத்தின் துறைமுக நகராக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் இவ்விடத்திற்கு அருகே தென்மேற்காக உள்ள மட்டுவில் என்ற இடத்தையே சோழர் கைப்பற்றி அவ்விடங்களில் நிலைகொண்டிருந்த யானைகளை சிறைப்பிடித்ததாகச் சோழச் சாச னங்கள் கூறுகின்றன. இன்றும் மட்டுவிலில் உள்ள பாரம்பரிய கிராமம் ஒன்று **ஆயம்** என்றே அழைக் கப்படுகிறது. ஆயம் என்பது உள்நாட்டு வெளிநாட்டு வணிகர்களிடம் இருந்து வரியிடப்படுவதைக் குறிக்கிறது. இயற்றாலையில் கட்டிட அழிபாடுகள் உள்ள இடத்தின் அமைவிடத்தை நோக்கும் போது அது தொண்டமனாறு ஊடாகவும், முள்ளியான் ஊடாகவும் பெருங்கடலுடனும் கடல்வழித் தொடர்பு கொள்ளக் கூடிய இடத்தில் அமைந்திருப்பது இங்கு நோக்கத்தக்கது.



பிரித்தானியர் கால நாணயம்

**தென்மராட்சியின் புராதன இந்து ஆலயங்கள்**


தென்மராட்சியின் வரலாற்றைத் தனித்துப் பார்ப்பதற்கு அப்பிரதேச மக்களிடையே காணப்படும் இறுக்கமான சமயப்பற்று ஒரு முக்கிய காரணமாகும். யாழ்ப்பாண வரலாற்றில் இஸ்லாம், கிறிஸ்தவம், ஆங்கிலக் கல்வி, ஐரோப்பிய கலாசாரம் எனப் பல்லினப் பண்பாடு முதலில் தோன்றி வளர்ந்த இடங்களில் ஒன்றாக தென்மராட்சியும் பார்க்கப்படுகிறது. அவ்வாறு பார்ப்பதற்கு அப்பிரதேசத்தின் நீண்டகால வரலாற்றுப்பின்னணியும், கால முன்னேற்றத்திற்கு ஏற்ப புதிய மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளும் பண்பும், வடஇலங்கையில் பிறநாட்டுப் பண்பாடுகளை முதலில் உள்வாங்கி கொள்ளும் மையத்தில் இப்பிராந்தியம் அமைந்திருப்பதும் முக்கிய காரணமாகும். இருப்பினும் இப்பிராந்தியத்தின் தொன்மையும், பண்பாட்டுத் தனித்துவமும் இங்கு பண்டு தொட்டு தோன்றி வளர்ந்து இந்து மதத்தால் உருவாகியவை என்பதில் ஐயமில்லை. தமிழர் வரலாற்றில் மதம் பற்றிய ஆய்வானது இனம், வரலாறு, பண்பாடு, பிரதேசம் பற்றிய ஆய்வாகவே பார்க்கப்படுகிறது. ஏனெனில் இந்து மதத்தை மையப்படுத்திய ஆலயங்களைச் சுற்றியே பண்டைய காலத்தில் அக்காலப் பண்பாட்டின் அனைத்துப் பரிமாணங்களும் தோற்றம் பெற்றன. தமிழகத்தில் ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னர் பல பேரரசுகள் தோன்றிய போதும் அரச மையம் என ஒன்று அக்காலத்தில் இருக்கவில்லை. மாறாக ஆலயங்களே அரசர்களின் இருப்பிடமாகவும், பாதுகாப்பு அரணாகவும், நிர்வாக மையமாகவும், மக்களின் கல்விக் கூடங்களாகவும், பொருளாதார மையமாகவும் செயற்பட்டன. இந்த அம்சங்களே யாழ்ப்பாண அரசுகால ஆலயங்களிலும் காணப்பட்டன. ஆகவே தென்மராட்சியில் இதுவரை அடையாளங்


காணப்பட்ட புராதன ஆலயங்களை வெறுமனமே சமயத்தின் அடையாளமாக மட்டும் பார்க்காது அக்காலகட்ட வரலாறு, பண்பாட்டு அடையாளமாகவும் பார்க்கப்பட வேண்டும்.

**இயற்றாலைக் கோட்டையில் இருந்த ஆலயம்**

ஆகம மரபு சார்ந்த ஆலயங்கள் இலங்கையிலும், தமிழகத்திலும் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தோற்றம் பெற்றன. இதற்கு முற்பட்ட கால ஆலயங்கள் கிராமிய ஆலயங்கள் அல்லது ஆகம மரபு சாராத ஆலயங்கள் என அழைக்கப்பட்டன. தென்மராட்சியில் இம்மரபு சார்ந்த ஆலயங்கள் பல தற்காலத்தில் காணப்பட்டாலும், இயற்றாலைக் கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஆலயம் மிகத் தொன்மையானதென்பதற்கு நம்பகரமான சான்றுகள் காணப்படுகின்றன. தற்போது அவ்விடத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டாலும் 1995 க்கு முன்னர் அவ்விடத்தில் இவ்வாலயம் காணப்பட்டது. சிறிய காடுகளுக்கு மத்தியில் வட்டமாக அமைக்கப்பட்ட நிலப்பரப்பில் ஏழு தெய்வங்கள் வைக்கப்பட்ட நிலையில் இது ஏழு கன்னிமார் ஆலயமாக வழிபடப்பட்டது. அத்தெய்வங்கள் இயற்கையான கற்களைக் கொண்டு அடையாளப்படுத்தியிருந்தாலும் இரு தெய்வங்களின் உருவம் இயற்கையான கற்களில் மனித உருவில் வடிவமைக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. இந்த ஆலயமிருந்த இடத்தில் புராதன குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதுடன் தெய்வ உருவங்கள் வைக்கப்பட்ட செங்கட்டியால் அமைந்த மேடையில் உள்ள சில செங்கற்களில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் சங்க காலத்திற்குச் சமமான காலத்தில் தென்மராட்சியிலும் கிராமிய வழிபாட்டு மரபு இருந்துள்ளதென்பது தெரியவருகிறது.


**வேலம்பிராய் விநாயகர் ஆலயம்**






தென்மராட்சியில் மறவன்புலவுக்கும் தனங்கிளப்பிற்கும் இடைப்பட்ட கடற்கரை சார்ந்த ஊரில் *வேலம்பிராய்* என்ற சிறிய குறிச்சி காணப்படுகிறது. தற்போது மக்கள் நடமாட்டமற்ற அப்பகுதி சிறிய பற்றைக் காடுகளாகக் காணப்பட்டாலும் முன்பொரு காலத்தில் செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் செறிவாகக் காணப்படுகின்றன. அண்மைக் காலங்களில் அப்பிரதேசத்தில் கள ஆய்வில் ஈடுபட்ட எமது துறைசார்ந்த ஆசிரியை செல்வி குமாரதேவன் பிற்காலத்தில் கட்டப்பட்ட சிறிய ஆலயத்திற்குப் பின்புறமாக மிகப் பெரிய ஆலயத்தின் அழிபாடுகளைக் கண்டுபிடித்தார். பின்னர் அவ்விடத்தில் நாம் கள ஆய்வை மேற்கொண்ட நிலையில் அவ்வாலயம் தொடர்பான பல ஆதாரங்களைச் சேகரிக்க முடிந்தது. வேலம்பிராய் விநாயகர்


ஆலயம் தொடர்பான காணிப் பதிவேட்டில் அவ்விடத்தில் இருந்த ஆலயம் ஒன்று 19 ஆம் நூற்றாண்டில் திருப்பிக்கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த ஆலயம் தற்போது வழிபாட்டில் உள்ளதா அல்லது இடிந்த நிலையில் காணப்படும் ஆலயமா என்பது தெரியவில்லை. ஆயினும் இடியுண்ட நிலையில் காணப்படும் ஆலயக் கற்கள் மிகப் பழமையான ஆலயத்திற்கு உரியதென்பதை அக்கற்களின் வடிவமைப்பும், அளவுகளும், வட்டம் மற்றும் சதுரவடிவில் அமைந்த கற்களில் செதுக்கப்பட்ட அலங்காரங்களும் உறுதி செய்கின்றன. மேலும் அவ்வா லயத்தில் காணக்கூடிய இன்னொரு ஆலயத்தின் கர்ப்பக் கிருக அழிபாடுகளுக்கு வடக்காக அமைந்த முன்மண்டபம் வட்டமான உயர்ந்த தூண்களைக் கொண்டிருப்பதுடன் இதன் வடக்குப்புறச் சுவர்கள் யன்னல்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. பொதுவாக யாழ்ப்பாண அரசு காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் ஒல்லாந்தரின் பிற்கால ஆட்சியில் திருப்பிக் கட்டப்பட்ட போது ஒல்லாந்தர் காலக் கலை மரபையும் தமது கட்டிடக் கலையில் இணைத்துக் கொண் டதற்கு ஆதாரங்கள் உண்டு. அதையே வேலம்பிராய் விநாயகர் ஆலயச் சிதைவுகளும் உறுதி செய்கின்றன.






**கல்வத்தைச் சிவன் கோவில்**

தென்மராட்சியில் நீண்ட காலமாகப் புகழ்ந்து பேசப்படும் ஆலயங்களில் மட்டுவில் கிராமத்தில் உள்ள கல்வத்தைச் சிவன் கோவிலும் ஒன்றாகும். தொண்டமானாறு கடல்நீரேரி சார்ந்த இடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் அதன் எதிரே சங்கிலியன் வாழ்ந்த கோப்பாய் கோட்டையும் காணப்படுகிறது. அங்கிருந்தே போர்த்துக்கேயப்படையெடுப்பின் போது சங்கிலியன் மட்டுவிலை அடைந்து பின்னர் மந்துவில் சென்றான் என்ற கருத்தும் காணப்படுகிறது. இவ்வாலயத்தை வரலாற்றுப் பழமை வாய்ந்ததாகக் கருதுவதற்குக் காரணம் இதன் கட்டிட சிற்பக் கலை மரபு அப்படியே தமிழகக் கலை மரபை குறிப்பாக பல்லவ, சோழக் கலை மரபை ஒத்திருப்பதாகும். அத்துடன் இவ்வாலயத்திற்கு மேற்கே காட்டுப் பகுதியில் காணப்படும் பிராமணர் வாழ்ந்த இருப்பிடத்தின் அழிபாடுகள் இவ்வாலயத்தின் பழமையை பறைசாற்றி நிற்கின்றன. மட்டுவிலோடு சோழர் காலத்திற்கும், யாழ்ப்பாண அரசு காலத்திற்கும் உள்ள தொடர்புகளை நோக்கும் போது இவ் வாலயத்தை பழமை வாய்ந்ததெனக் கருத இடமளிக்கிறது.







பிராமணரின் இருப்பிடம்

**சாவகச்சேரியில் யாழ்ப்பாண இராசதானி ஆலய அழிபாடுகள்?**

தற்போது வாரிவனேஸ்வரர் என அழைக்கப்படும் சாவகச்சேரியில் உள்ள ஆலயம் பழைய ஆலயத்தை நினைவுபடுத்தும் வகையில் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். ஆயினும் அதில் வழிபடப்படும் விக்கிரகங்கள் சில பழைய ஆலயத்தைச் சேர்ந்ததென்பதில் ஐயமில்லை. இவைபற்றி அண்மையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது சாவகச்சேரி நீதி மன்றம், பஸ்தரிப்பு நிலையம், சந்தைப் பகுதி ஆகிய இடங்களில் எதிபாராமல் கிடைத்த விக்கிரகற்கள் இவ்வாலயத்தில் வைத்து வழிபடப்பட்டதாகவும், கடந்த கால அனர்த்தங்களில் அவற்றில் உடைவுகள் ஏற்பட்டதால் ஆலயத் திருக் குளத்தில் போடப்பட்டதாகவும் எமக்கு தெரிய வந்தது. அதன் அடிப்படையில் திருக்குளத்தில் அச்சிலைகளைத் தேடிய போது 12 சிற்பங்கள் எமக்கு கிடைத்தமை எமக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.







இவ்விக்கிரகங்கள் அனைத்தும் பழமையானவை எனக் கூறமுடியாது. ஆனால் அவற்றில் சிலவற்றின் கலை மரபுகள் தனித்துவம் வாய்ந்தவையாகவும், பழமை வாய்தவையாகவும் காணப்படுகின்றன. பொதுவில் இவ்விக் கிரகங்கள் ஒரு முருகன் ஆலயத்திற்கு உரியன வாகவே காணப்பட்டன. இச்சிற்பங்களின் காலம், கலைமரபு பற்றி மதிப்பிடுவதற்கு அவற்றின் புகைப் படங்களை தமிழத்தி லுள்ள தலைசிறந்த கலைவரலாற்று அசிரியர்களுக்கு அனுப்பிய போது அவர்கள் ஏகோபித்த நிலையில் இவற்றின் காலம் கி.பி.14-15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும், இவை யாழ்ப்பாணத்திற்கே உரிய தனித்துவமான கலைமரபில் செதுக்கப்பட்டவை எனவும் சுறியுள்ளனர். அவர்களின் கருத்தையும், அதற்கு அவர்கள் காட்டிய காரணங்களையும் நோக்கும் போது இச்சிற்பங்கள் யாழ்ப்பாண அரசு கால ஆலயத்தோடு தொடர்புடையதாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. அப்படியானால் பழைய வாரிவனேஸ்வரர் இருந்த இடத்திற்கு அருகில் ஒரு

முருகன் ஆலயமும் இருந்திருக்க வேண்டும் எனக் கூற இடமுண்டு. அதை எதிர்கால ஆய்வுகள்தான் மேலும் உறுதிப்படுத்தலாம். .


**சாவகச்சேரியில் வாரிவனேஸ்வரர் ஆலய அழிபாடுகள்**

சாவகச்சேரியின் புனித வரலாற்றுச் சின்னங்கள் கவனிப்பாரற்ற நிலையில் சீரழிந்து போவதை பல தடவைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சுட்டிக் காட்டிய சுப்பிரமணிய சர்மா அண்மையில் அங்கு அத்திவாரம் வெட்டும் போது கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் ஒன்றைப் பார்வையிடுமாறு இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திரு.கணேசலிங்கம் மூலம் வேண்டினார். அவ் விக்கிரகத்தை பார்வையிடச் சென்ற போது அவ் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட சுற்றாடலிலிருந்து கிடைத்த மேலும் 3 விக்கிரகங்களை ஆராயச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந் நான்கு விக்கிரகங்களும் பிற தேவைகளுக்காக நிலம் வெட்டப்பட்ட போது எதிர்பாராமல் கிடைத்தவையாகும். முதலில் நிலத்தை வெட்டியவர்கள் இவ்விக்கிரகங்களைக் கண்டபோது வெறும் கற்கள் எனக் கருதி சாதாரண அகழ்வு மூலம் வெளியே எடுத்ததனால் அவ் விக்கிரகங்களில் பல உடைவுகளும், வெடிப்புக்களும் காணப்படுகின்றன. தற்போது இந் நான்கு விக்கிரகங்களும் பிற்காலத்தில் கட்டப்பட்ட வாரிவனேஸ்வரர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தாலும் அவ் விக்கிரகங்களில் உள்ள உடைவு காரணமாக அவை கர்ப்பக்கிரகத்தில் வைத்து வழிபடப்படாது ஆலய முன் மண்டபத்திலும், இவற்றிற்கென புதிதாகக் கட்டப்பட்ட சிறிய மண்டபங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. இவ் விக்கிரகங்களில் சிலவற்றை யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நூதனசாலையில் வைப்பதற்கு தற்போதைய ஆலய நிர்வாக சபை முன்வந்துள்ளது.



இந் நான்கு விக்கிரகங்களில் ஒன்று மனோன்மணி அம்மனுக் குரியதாகும். இவ்விக்கிரகம் சாவகச்சேரி சந்தைக்கு தெற்கே பிரதான வீதிக்கு கிழக்காக உள்ள இராசமாளிகை என்ற வளவில் மலசலகூடம் அமைப்பதற்கு நிலத்தை வெட்டிய போது 6 அடி ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும். கருங்கல்லில் நிற்கின்ற சமபங்க நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகம் 23/4 அடி உயரத்தை உடையது. ஒடுங்கிய இதன் இடை 5 அங்குல அகலத்தையும், இடுப்புக்கு கீழே உள்ள தொடைப் பகுதி ஒரு அடி அகலத்தையும் கொண்டுள்ளது. இதன் நான்கு திருக்கரங்களில் முழங்கையுடன் இணைந்த இடது வலது மேற்கரங்கள் பாசமும், தாமரையும் தாங்கி நிற்க, வலது இடது கீழ்க் கரங்கள் முறையே அபயகஸ்த்தத்தையும், வரதகஸ்த்தத்தையும் குறித்து நிற்கின்றன. 9 அங்குல உயரமுடைய

இதன் திருமுடியின் மேற்பாகத்தில் உச்சிக் கொண்டையும் நெற்றிப்பட்டத்திற்கு மேல் இரத்தினாரமும், மகுடத்தின் முற்பக்கத்தில் குறுக்காகவும் நிலைக்குத்தாகவும் 3 குறியீடுகளும் காணப்படுகின்றன. இதன் காதில் மும்மூன்று மகர குண்டலமும், கழுத்தில் திரண்ட தாலி அமைப்பும், அதன் மேல் அகன்ற பதக்கமும் அணியப்பட்டுள்ளன. கல் விக்கிரகங்களுக்கு பொதுவாக உள்ள முப்புரிநூல் இவ் விக்கிரகத்தில் மிகத் தெளிவாக செதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக இவ் விக்கிரகத்தின் ஒடுங்கிய இடையும், அகன்ற மார்பகமும், உயர்ந்த மகுடமும், கழுத்தில் உள்ள அலங்காரத் தன்மை கொண்ட மார்பகங்களும் பழைமையான தெய்வ விக்கிரகம் என்பதற்குச் சான்றுபகர்கின்றன. இவ் விக்கிரகத்தின் வலது இடது மேல் கரங்களை நிலத்திற்குள் இருந்து வெளியே எடுத்த போது உடைந்து விட்டதனால் அவ்விக்கிரகம் வாரிவனநாதர் ஆலயத்திற்கு மேற்காக இதற்கென கட்டப்பட்ட மிகச் சிறிய மண்டபத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.



இவ்விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட காணியில் அண்மையில் நாம் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்டிருந்த வேளையில் அக் காணியில் புதிதாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டோர் மண்ணுக்குள் மூடுண்டிருந்த செம்பினால் வார்க்கப்பட்ட நாக விக்கிரகம் ஒன்றை கண்டெடுத்தனர். இவ்விக்கிரகம் தற்கால ஆலயங்களில் வைத்து வழிபடப்படும் விக்கிரகங்களில் இருந்து பல வகையில் வேறுபடு கின்றது. பத்து அங்குல உயரத்தில் படமெ டுத்த நிலையில் உள்ள இவ் விக்கிரகத்தின் உடற்பகுதி ஆறு வளையங்களாக சுருண்ட நிலையில் வார்க்கப்பட் டுள்ளது. அகண்ட இதன் தலைப்பகுதியின் மேல் தாமரைத் தண்டொன்றும், அதன் மேல் ஆறு இதழ்கள் கொண்ட தாமரையும், அதற்குமேல் தெய்வ உருவம் நிற்பதற்குரிய வட்டவடிவிலான பீடமும் அமைந் துள்ளது. மிகுந்த அழகும் பளபளப்புத் தன்மையும் கொண்ட இவ் விக்கிரகம் பிற்கால விக்கிரகங்களைப் போல் உடலில் உட்பக்கம் வெறும் கோதாக இல்லாது உடல் உறுப்புக்கள் முழுவதும் தனிச் செம்பினால் வார்க்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் முன்பு ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் எனக் கருதக்கூடிய செங்கட்டிகளும், கட்டட சிதைவுகளும் காணப்படு

கின்றன. இவ்விடம் இராசமாளிகை வளவு எனவும் இதற்கு அருகில் உள்ள காணி இராசவளவு எனவும், அருகில் உள்ள வீதி இராச வீதி எனவும் அழைக்கப்படுவது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

ஏனைய விக்கிரகங்களில் அம்மனும் சூரியனும் தற்போதைய சாவகச்சேரி நவீன சந்தைக்கு கிழக்காகவுள்ள பழைய சந்தைப் பகுதியில் அத்திவாரம் வெட்டும் போது கண்டெடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இவற்றுள் அம்மன் விக்கிரகம் மிகுந்த கலையுணர்வும், தென்னிந்திய திராவிடக் கலைமரபுடன் கூடிய தொழில்நுட்பமும் கொண்டதாகும். தற்போது இலங்கையில் வழிபடப்பட்டுவரும் உயரம் கூடிய அம்மன் விக்கிரகங்களில் ஒன்றாக இதைக் கருத இடமுண்டு. கருங்கல்லில் முப்பரிமாண நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ் விக்கிரகம் பீடமற்ற நிலையில் 4 அடி உயரத்தையும் பீடத்துடன் 5 ¼ அடி உயரத்தையும் கொண்டுள்ளது. ஒரு அடி உயரமுடைய கேச மகுடம் 3 பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது. மேல் பகுதியில் உச்சிக் கொண்டையும், நெற்றிப்பட்டத்திற்கு மேல் இரத்தினாரமும், மகுடத்தின் முற்பக்கத்தில் குறுக்காகவும் நிலைக்குத்தாகவும் 3 குறியீடுகள் காணப்படுகின்றன. நான்கு கைகளை கொண்ட இவ் விக்கிரகத்தின் வலது மேற் கரத்தில் வெண்டையமும், இடது மேல் கரத்தில் தாமரையும் காணப்படுகின்றது. முந்தைய இருகரங்களில் வலது கரம் அபயகஸ்தத்தையும், இடது கரம் வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன. இதன் காதில் மகர குண்டலமும், கழுத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ள பதக்கமும் காணப்படுகின்றன. இதன் இடுப்பு 6 அங்குல அகலத்தையும், அதன் கீழுள்ள தொடைப் பகுதி 9 அங்குல அகலத்தையும் கொண்டுள்ளது. இடுப்பிலுள்ள சிங்க முகப்புடைய மேகலை இடுப்பைச் சுற்றி தொங்கும் சங்கிலியால் இணைக்கப்பட்டிருப்பதையும், இதனுடன் இணைந்த நிலையில் உள்ள பீதாம்பரம் இரு கால்களுக்கிடையே கணுக்கால் வரையுள்ள கால் சலங்கை வரை நீண்டிருப்பதையும் தெளிவாகக் காணமுடிகின்றது. வலது கீழ் கரத்தின் முழங்கையுடன் வெளிப்படுத்தப்பட்ட முடிக்குஞ்சரமானது முற்பக்கத்தில் தெரியுமாறு இருப்பதும், இடது பக்க தோளின் மேலால் செல்லும் முப்புரிநூல் தெளிவாக செதுக்கப்பட்டிருப்பதும் இவ்விக்கிரகத்தில் காணக்கூடிய சிறப்பம்சங்களாகும்.




இவ்விக்கிரகத்துடன் சந்தைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மற்றைய விக்கிரகமான சூரியன் 2 1/2 அடி உயரமுடையது. நிற்கின்ற சமபங்க நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகத்தின் கருண்ட மகுடம் 6 அங்குல உயரமுடையது. இம்மகுடத்தின் பின்னாலுள்ள ஒளிவட்டம் நீள்வட்ட வடிவில் அமைந்துள்ளது. 9 அங்குல உயரத்திலுள்ள சதுர வடிவிலான பீடத்தில் ஒழுங்கற்ற பகுதி மீது மீண்டும் வட்ட

வடிவிலான தாமரை ஆசனத்தின் மீது இவ்விக்கிரகம் அமைந்துள்ளது. அதன் இரு கரங்களிலும் தாமரை மலர் காணப்படுகின்றது. ஏனைய உடல் உறுப்புக்களும், ஆடை ஆபரணங்களும் சிதைவடைந்திருப்பதால் அவை பற்றி பூரணமாக கூறமுடியாதிருக்கின்றது.

இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள விக்கிரகங்களுள் ஆவுடையுடன் கூடிய விக்கிரகம் சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்விக்கிரகம் சந்தைக்கும் இராசமாளிகை வளவிற்கும் இடையிலுள்ள நீதிமன்ற வளவில் பழைய கிணறு மீண்டும் வெட்டப்பட்ட போது கண்டெடுக்கப்பட்ட தாகும். இச்சிவலிங்கம் மாதோட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்லவர் காலச் சிவலிங் கத்தைப் போல் மிகப் பெரியதாகும். எட்டடி உயரமான இந்த லிங்கத்தின் 6 ¾ அடி உயரமான பாகம் மண்ணினுள் மறைக் கப்பட்டு 1 ¼ அடி உயரமான பாகம் மட்டும் வெளியே தெரியுமாறு வைக்கப்பட்டுள்ளது. கிணற்றிலிருந்து வெளியே எடுத்த போது ஏற்பட்ட உடைவு காரணமாக லிங்கத்தின் மேற் பாகம் தற்போது ஒழுங்கற்றுக் காணப்படுகின்றது. கருங்கல்லில் வட்ட வடிவில் செய்யப்பட்டுள்ள இதன் ஆவுடை 1 ¾ அடி உயரத்தையும் பத்தடி சுற்றளவையும் கொண்டுள்ளது. இவ்வாவுடையின் அழகுத் தன்மையும் தோற்றமும் பிற்கால ஆவுடையின் அமைப்பிலிருந்து வேறுபட்டதாக காணப்படுகின்றது.




மேற்குறிப்பிட்ட நான்கு விக்கிரகங்களும் குறிப்பிட்ட மிகச் சிறிய வட்டத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதை நோக்கும் போது இவ் விக்கிரகங்கள் தொடர்பாக சில கேள்விகள் எம்முள் எழுகின்றன.

**போர்த்துக்கேயரின் கலையழிவுக் கொள்கை**

யாழ்ப்பாண அரசு காலத்தில் இந்து மதம் அரச ஆதரவு பெற்ற ஓர் மதமாக விளங்கியது. ஆயினும் இவ்வரச காலத்திற்குரியதெனக் கருதக்கூடிய ஒரு ஆலயந்தானும் இதுவரை முழுமையாகப் பாதுகாக்கப்படவில்லை. இதற்குப் போர்த்துக்கேயரும் பின்வந்த ஒல்லாந்தரும் கடைப்படித்த இந்து மதத்திற்கு எதிரான கலையழிவுக் கொள்கை ஒரு முக்கிய காரணமாகும். போர்த்துக்கேய ஆசிரியரான கெய்றோஸ் பாதிரியார் தமது மத நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்தில் இருந்த சிறியதும் பெரியதுமான 500 இந்து ஆலயங்களை இடித்து அழித்ததாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் இருந்து பெறப்பட்ட கற்களைக் கொண்டே இந்து ஆலயங்களுக்கு அருகே புதிய கிறீஸ்தவ ஆலயங்கள் கட்டப்பட்டதாக தெரிகிறது. பிற்காலத்தில் பிற தேவைகளுக்காக நிலங்கள் வெட்டப்பட்ட போது போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் சிதைவுகளும், விக்கிரகங்களும் கண்டுபிடிக்கப்

பட்டமை பொதுவான வரலாற்று உண்மையாகும். இதற்கு போர்த்துக்கேயரின் கலையழிவுக் கொள்கையில் இருந்து இந்து விக்கிரகங்களைப் பாதுகாக்க மதப்பற்றுடைய மக்கள் கிணறுகளிலோ மறைவான இடங்களிலோ அவ் விக்கிரகங்களைப் புதைத்து வைத்திருந்தமை ஒரு பொதுக் காரணமாகும். இவ்வாறான ஒரு கருத்து யாழ்ப்பாண அரசு தொடர்பாக எழுந்த யாழ்ப்பாண வைபவமாலையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் கிடைத்த நான்கு விக்கிரகங்களையும் நோக்கும் போது அவை தற்செயலாகவோ அல்லது பிற இடங்களில் இருந்து கொண்டுவந்து புதைக்கப்பட்டனவென்றோ கூறமுடியாது. இந்த நான்கு விக்கிரகங்களும் ஏறத்தாழ 100 சதுரயார் பரப்பினுள் கண்டெடுக்கப்பட்டவையாகும். கண்டெடுக்கப்பட்ட இடங்களில் உள்ள



கட்டடத்தின் சிதைவுகளையும் பிற தொல்பொருட்சான்றுகளையும் நோக்கும் போது முன்பு இவ்விடத்தில் பெரியதோர் ஆலயம் இருந்ததென நிச்சயப்படுத்திக் கூறலாம். தற்போதைய சாவகச்சேரி சந்தைப் பகுதியில் அண்மையில் பிற தேவைக்காக நிலம் வெட்டப்பட்ட போது ஓர் கட்டடத்திற்குரிய அத்திவாரமும், கட்டடத்தின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்றுகூட செங்கட்டிகளால் கட்டப்பட்ட அத்திவாரங்களை மிகத் தெளிவாக பார்க்க முடியும். இவ் அத்திவாரங்களிற்குத் தெற்கே தற்போதைய பஸ்தரிப்பு நிலையத்தில் ஒரு சிறிய கிணறு ஒன்று காணப்படுகின்றது. இக்கிணறு முன்பிருந்த ஆலயத்தின் திருமஞ்சனக் கிணறு எனக் கூறப்படுகின்றது. இக் கிணற்றுக்குத் தெற்காக நீதிமன்ற வளவில் 3 அடி அகலம் உள்ள செங்கட்டிகளால் கட்டப்பட்ட கட்டடத்தின் சுவர்ப் பகுதி காணப்படுகின்றது. இச்சுவருடன் இணைந்த கட்டடத் தொகுதி ஒன்று பிரித்தானியர் ஆட்சியில் வரலாற்று நினைவுச் சின்னமாக சட்டரீதியாக பாதுகாக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. அண்மையில் தற்போதைய நீதிமன்றம் இருந்த இடத்தில் புதிய நீதிமன்றம் கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டியபோது பரவலாக ஆலயத்திற்குரிய முருகக் கற்களுடன், அத்திவாரத்திற்குப் பயன்படுத்திய செங்கற்களும் பரவலாக வெளிவந்துள்ளன. இந்த ஆதாரங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஊகமாக கூறிய ஆலயம் ஐரோப்பியர் ஆட்சியில் கட்டப்பட்ட நீதிமன்றம் இருந்த இடத்தில் இருந்துள்ளதென்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

**ஆலயத்தின் காலம்**

இவ்வாலயத்தின் தோற்ற காலத்தை அறிதியிட்டுக் காட்டும் சாசன ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சியின் முற்பகுதியில் சுதேச மதங்களுக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டதால் அக்காலத்தில் இவ்வாலயம்

கட்டியிருக்க முடியாது. பிரித்தானியர் ஆட்சியில் இது கட்டப்பட்டதாலோ அல்லது ஏற்கனவே இருந்த ஆலயம் அழிக்கப்பட்டிருந்ததாலோ அது பற்றிய வரலாறு நிச்சயம் பாதுகாக்கப் பட்டிருக்கும். ஆகவே இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்திற்கு முந்தியது என்பதில் கருத்துவேறுபாட்டிற்கு இடமில்லை. மேலும் ஒரு ஆலயத்தின் பழமையைக் கணிப்பதில் அவ்வாலயத்தோடு தொடர்புடைய சிற்பங்கள், சிலைகள் என்பவற்றின் வடிவமைப்பு, கலைப்பாணி என்பனவற்றிற்கு முக்கிய இடமுண்டு. அந்த நோக்கில் இவ்வாலயத்தோடு தொடர்புடையதெனக் கருதப்பட்ட விக்கிரகங்களின் புகைப்படங்களை தென்னிந்தியக் கலை வரலாற்று ஆசிரியர்களுக்கு அனுப்பிய போது இவற்றின் கலைமரபை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இவ்விக்கிரகங்களின் காலம் கி.பி. 11-13 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதென அதாவது பிற்பட்ட சோழர் அல்லது முற்பட்ட பாண்டியர் காலத்திற்கு உரியதெனக் கணித்துள்ளனர். இக்காலக்கணிப்பையே பேராசிரியர் இரகுபதி அவர்களும் கொடுத்துள்ளார். இவற்றின் அடிப்படையில் 16ஆம் நூற்றாண்டில் எழுந்த தக்ஷிணகைலாசபுராணம் கூறும் வாரிவானேஸ்வரர் ஆலயத்தின் தோற்றம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்கு அதாவது யாழ்ப்பாண அரசுக்கு முந்திய காலம் எனக் கூறலாம்.

ஒரு பிரதேசத்தின் வரலாற்றுப் பெருமை என்பது அப்பிரதேச சமய விழுமியங்களிலேயே தங்கியுள்ளன. வரலாற்றில் தென்மராட்சி பற்றிப் பேசப்பட்டு வருவதற்கு அது தனது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களைத் தொய்வின்றி பேணிவருவது காரணமாக இருக்கலாம். அதற்கு இப்பிரதேச மக்களுக்கு நீண்ட சமயப் பாரம்பரியம் இருந்து வருவது காரணமாகும். அத்தகைய பண்பாட்டுப் பின்புலத்தில் வந்ததன் காரணமாகவே அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள் இக்கல்லூரியை நிறுவினார். ஆகவே எதிர்காலத்திலும் இக்கல்லூரி எமது பாரம்பரிய விழுமியங்களை தொடர்ந்து பாதுகாக்க கலங்ரை விளக்காக இருக்கவேண்டும் என்பதே எமது எல்லோரினதும் பேரவாவாகும்.